தொகுதி 7] [பகுதி 4

# பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின்
மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை)

318

சித்ரபானு ஹு ஆடி மீ
JULY 1942

பிரசுர கர்த்தர்கள் :

தென் இந்திய ஆசிரியர் சங்கம்

520, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 2—0—0
வெளி நாடு
F.M.S.S.S. ஷில்லிங் 4

தனிப் பிரதியின் விலை :
உள் நாடு ரூ. 0—4—0
வெளி நாடு ரூ. 0—6—0

# பொருளடக்கம்

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | தாய் மொழி கற்பித்தல் .... .... .... —M. சுப்பிரமணியம் | 91 |
| 3. | அநுபவக் கனிகள். .... .... .... —P. N. கல்யாண சுந்தரம் | 98 |
| 4. | தாய்மொழி கற்பித்தல்—(கதை) .... .... —க. அருணாசலம், பி.ஏ.,எல்.டி. | 102 |
| 6. | செய்தித் திரட்டு .... .... .... | 109 |
| 7. | பத்திராதிபர் குறிப்பு .... .... .... | 114 |


# வேங்கட்ராமா அண்டு கம்பெனி,

பிரசுரகர்த்தர்கள்

எஸ்பிளனேட் :: சென்னை

—:o:—

## தமிழ்ச் சுடர் வாசகங்கள்

ஆசிரியர்கள்

வித்துவான் S. G. கணபதி அய்யர், B.O.L.

வித்துவான் மிஸ். M. மாசில்லாமணி, M.A., L.T.

(ஸ்திரீகளின் கிருஸ்தவக்கல்லூரி, சென்னை)

புதிய பாடதிட்டப்படி எழுதப்பட்டு சென்னை Text-Book Committee யாரால் அங்கிகரிக்கப்பட்டவை.

| | | | |
|---|---|---|---|
| முதல் புத்தகம் | .... 0—3—0 | ஐந்தாம் புத்தகம் | .... 0—6—6 |
| இரண்டாம் புத்தகம் | .... 0—3—6 | ஆறும் புத்தகம் | .... 0—7—0 |
| மூன்றும் புத்தகம் | .... 0—4—6 | ஏழாம் புத்தகம் | .... 0—8—0 |
| நான்காம் புத்தகம் | .... 0—5—6 | | |

## ஆரம்பகணிதம்

ஆசிரியர் M. சோமசுந்தரம், B.A., L.T.

உதவி ஆசிரியர், ஹைஸ்கூல், பசுமலை.

# சந்தாதார்களுக்கு அறிக்கை

சந்தாதார்களுக்கு ஞாபகப் படுத்தும் பொருட்டு பாலர் கல்வியின் சந்தா எந்த மாதத்துடன் முடிவடைகிறதோ அந்த மாதப் பத்திரிகையில் அச்சந்தா நம்பர்களைப் பிரசுரிக்கிறோம். சந்தாதார்கள் அதை முக்கியமாகக் கவனித்து சந்தா தொகையைத் தவக்கமில்லாமல் முன்பணமாக அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். தற்சமயம் அசௌகரியமாயிருந்தால் சந்தா அனுப்பும் தேதியைக் குறித்து உடனே ஒரு கார்டு எழுதியனுப்பவும். தவறினால் வி. பி. அனுப்பி சந்தாவை வசூலிக்க நேரிடும்.

தவிர ஒவ்வொரு மாதமும் சஞ்சிகை 25உக்குள் கிடைக்காவிட்டால் உடனே தெரிவிக்கவேண்டும். அதற்குப் பிறகு வரும் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

1942 ஜுலை மாதத்துடன் முடிவடையும் சந்தா நம்பர்கள் :—

சென்னை — M. 25, 34. 39.

செங்கல்பட்டு — CH. 19, 35.

சித்தூர் — CT. 8, 19.

வட ஆற்காடு — N. A. 28.

தென்னாற்காடு — S. A. 3, 4, 13.

தஞ்சாவூர் — Tan. 7. 9, 10, 14, 21. 53, 54, 55, 56. 66.

திருச்சி — Tri. 16, 24, 35. 37. 38. 57.

ராமனாதபுரம் — Rd. 19, 32, 36. 38, 39, 69.

மதுரை — Md. 11. 12, 29, 31, 32.

திருநெல்வேலி — Tin. 75, 77.

சேலம் — S. 24, 34, 36.

கோயமுத்தூர் — Co. 30, 43, 44, 45.

திருவாங்கூர் — Tra. 3.

குறிப்பு :—சந்தா நம்பர்கள் விலாசத்துடன் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆபீஸுக்கு அனுப்பும் ஒவ்வொரு கடிதத்திலும் மணியார்டர் கூபன்களிலும் சந்தா நம்பரைக் கட்டாயம் குறிப்பிடவும். —பத்திராதிபர்.

மாணவர்களே! வாலிபர்களே!!

உங்களுக்கென சமைத்து வைத்துள்ள

## சுவாமி விவேகாநந்தர்

## ஞான அமிழ்தத்தை உண்ணுங்கள்.

★

| | | |
|---|---|---|
| ஸ்ரீ விவேகாநந்த சரித்திரம் | விலை | 0—12—0 |
| ,, ,, கடிதங்கள் | ,, | 0—10—0 |
| ,, ,, நமது தாய் நாடு | ,, | 0— 8—0 |
| ,, ,, சுவாமிகள் | ,, | 0— 3—0 |
| ,, ,, எனது குருநாதர் | ,, | 0— 3—0 |

★

விரிவான ஜாபிதாவுக்கு எழுதுக

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை.

## திருச்சி ஜில்லா ஆசிரியர் சங்கப் பதிப்பு

★ ஆரம்ப ஆசிரியர் பாடதிட்ட மொழி பெயர்ப்பும் விமர்சனமும்

★ ஆரம்பக் கல்வி விதி விளக்கம்

★ உபாத்தியாயர்கள் கைப்புத்தகம்

(200 பக்கங்கள் அடங்கியது)

விலை ரூ. 0—8—0. (தபால் சிலவு பிரதியேகம்)

: வேண்டுபவர்கள் :

ஸ்ரீ S. T. ராமானுஜ அய்யங்கார்

ஸ்வாமிநாத பவன் :: ஸ்ரீரங்கம்

: என்ற விலாஸத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும் :

# பாலர் கல்வி

| தொகுதி 7 | 1942 ௵ ஜூலை ௴<br>சித்ரபானு ௵ ஆடி ௴ | பகுதி 4 |
|---|---|---|

## தாய்மொழி கற்பித்தல்

**M. Subramaniam**, *L. M. C. High School, Shiyali.*

### XII. செய்யுள் கற்பிக்கும் முறை—பொது

**செய்யுளின்—விசேஷ சக்தி.**

செய்யுள் பாடத்தைப் போதிப்பதற்கு முன்பு செய்யுளின் விசேஷ சக்தியை ஆசிரியர்கள் கவனிக்கவேண்டும். இதைத் தெரிந்துகொண்டால் எந்தப் பாகத்தை அதிக சிரத்தையோடு போதிக்கவேண்டும் என்பதும் எதை இலேசாகச் சொல்லவேண்டும் என்பதும் தெரியும். செய்யுளானது, வசன நடை இலக்கியங்கள் போல் அன்று. அது அழகு என்னும் உண்மைப் பொருளைச் சொல் உருவமாய்க் கொண்டுள்ளது. இச்சொற்கள் எல்லாம் வெறும் பொருளை மாத்திரம் காட்டுவதற்கு அமைந்து இராமல் பொருட்களின் இரகசிய அர்த்தங்களையும், இயற்கையில் காணும் அழியாத உண்மைப் பொருட்களையும் கவிஞர்களின் கருத்து அல்லது மனோபாவத்தையும் ஓர் அளவில் நமக்குப் புலப்படுத்துகின்றன. இயற்கையில் மறைபொருளாக இருக்கும் அநேக விஷயங்களைப் புலன்களுக்குச் கொஞ்சம் விளக்கிக் காட்டி, நம் உள்ளத்தைக் கவிஞர்கள் சந்தோஷப்படுத்துகின்றனர். இவ்வாறு அடைந்த இன்பம் பொதுவாய்க் கொஞ்சம் குறைவாக இருப்பினும் சிற்சில சமயங்களில் அது நம் நினைப்புக்குத் திடீரென்று வந்து உற்சாகத்தைத் தருகிறது. மஹா கவிஞர்களுடைய கவிகள் எல்லாம் இச்சக்தி வாய்ந்தன வென்றே நினைக்கவேண்டும். ஒன்றை உற்று நோக்கி அதன் உண்மையை அழகான உலகப் பொருளோடு கலந்து இன்பமளிக்கும் இசைச் சொற்களாலும் அலங்காரங்களாலும், வருணனைகளாலும், அதை உருவாக்கி, பின்பு அதைப் படிப்போர் மனதைப் பரவசமாக்கிவிடும் குணம் மாபெரும் புலவர்களுக்கே உரியது. இச்சக்தி

யானது நம்முடைய தவறுதலான எண்ணங்களுடைய வேரைக்களைந்து, பிரயோஜனமற்ற சம்பிரதாயங்களின் வரம்பு பொருளைத் துண்டித்துச் சீர் செய்து நம்மைச் சரியான மனப்பான்மையில் நேர்மைபடச் செய்கிறது. பொருட்களின் "உண்மை உருவத்தை" நாம் அறிந்துகொள்ளவே இச் செய்யுட்கள் காரணமாக இருக்கின்றன. ஆகையால் இத்தகைய செய்யுட்களை மாணவர்களுக்குப் போதிக்கையில் சிலகஷ்டங்கள் உண்டாகின்றன.

### ஒரு பிரச்னை.

ஆசிரியர்களுக்கு உண்டாகும் பிரச்னை என்ன? செய்யுளின் பிரதான அம்சம் கலை இன்பந் தருவதோடு, பொருட்களின் உண்மையையும் குறிப்பாக உணர்த்துகின்றது. ஆகையால் கலைப்பொருளை மாத்திரம் போதிக்க ஆசிரியர்கள் நோக்கம் கொள்வதா அல்லது, உண்மைப் பொருளாகிய நீதிகளையும் போதிப்பதா? விசேஷ உண்மைகளும், போதனைகளும், இன்பம் தரக்கூடியனவாயினும் மாணவர்களுக்கு இதை எடுத்துச் சொன்னால் அவர்கள் உற்சாகம் அடைவார்களா? கற்பனை, வருணனை, நீதி அல்லது படிப்பினை, இசை, புலவரின் உட்கருத்து ஆகிய இப்பொருட்களில் எதை விசேஷமாகப் போதிப்பது? செய்யுளின் பிரதான அம்சமாகிய கலை விசேஷத்தைப் போதிப்பதா, அல்லது நீதியை போதிப்பதா? எந்தப்பொருளை விசேஷமாகப் போதித்தால் பிள்ளைகளுக்குச் செய்யுளைப் படிக்கஒரு உற்சாகம் ஏற்படும்? இவ்விதக் கேள்விகள் ஒவ்வொரு ஆசிரியருக்கும் உண்டாகலாம். இதை அறிந்து கொள்வதற்கு முன்னால் செய்யுளில் ஏன் போதனை அடங்கி இருக்கவேண்டும் என்பதைப் பார்ப்போம்.

### செய்யுளும்—போதனையும்

ஒவ்வொரு செய்யுளையும் அல்லது பல தொடர்ச்சியான செய்யுட்களையும் ஆராய்ந்து பார்த்தால் அவற்றில் ஒரு விசேஷக் கருத்து அடங்கி இருக்கும். போதனை விஷயம் இல்லாமல், செய்யுட்கள் அநேகமாய் இரா. எல்லாப் புலவர்களும் ஒரு உண்மைப் பொருளை விளக்கவே செய்யுள் இயற்றுகின்றார்கள். இச்செய்யுட்களில் இருக்கும் வருணனைப் பாகத்தையும் பிறவற்றையும் வெகு நுட்பமாக ஆராய்ந்து பார்த்தால் அவை எல்லாம் கவிஞனுடைய கருத்துக்கும் நோக்கத்திற்கும் ஒத்தனவாகவே இருக்கும். குருமார்கள் அல்லது பிரசங்கிகளைப்போல, நீதிகளையும், போதனைகளையும் நேராக வற்புறுத்திச் சொல்வதற்குப் பதிலாக, பெரும் புலவர்கள் தங்கள் கருத்தை வெகு அழகாகவும், படிப்போர் மனத்தில் உற்சாகம் உண்டாகும் வண்ணமும், நீதிப் பொருளைக் குறிப்பாக அறியுமாறும் கவிகளை எழுதுகின்றார்கள். செய்யுட்களில் நீதிப் பொருள் மறைந்தே இருக்கின்றது. எப்படி ஒரு ஓவியக்காரன் பல வர்ணங்களின் உதவியால் தன் மனத்துக்கு ஒத்த ஒரு உருவத்தை எழுதி அதன் சூக்ஷ்மப் பொருளைப் பிறர் அறிந்துகொள்ளுமாறு விட்டுவிடுகின்றானோ அப்படியே கவிஞனும் தன் கவியில் பல

இயற்கை வருணனை முதலியவற்றால், ஒரு கலைப்பொருளை உண்டாக்கி அதன் பிரதான கருத்தை அறிந்துகொள்ள அதைப் படிப்பவர்களுக்கே விட்டுவிடுகின்றான். செய்யுளானது ஒரு கவிஞனுடைய நிர்மாணக் கலை. இக்கலையில் பெரிய உண்மை அடங்கித்தான் இருக்கும். இக்கலையானது ஒரு இலக்ஷியத்தை அடிப்படையாகவே கொண்டிருக்கும். இலக்ஷியமும் உண்மைப் பொருளும் செய்யுளில் மறைபொருளாகவே பரந்து கிடக்கும் இப்படிப் பரந்திருக்கும்போது சிற்சில இடங்களில்தான் நீதிப் பொருளும் நன்றாக விளங்கும். எனவே ஒரு செய்யுளில் அல்லது ஒரு விஷயமடங்கிய பல தொடர்ச்சியான செய்யுட்களில் நீதிப்பொருள் இல்லாமல் இருக்காது? இனி எந்தப் பாகத்தை மாணுக்கர்களுக்குப் போதிக்க வேண்டும்? அல்லது செய்யுளை உண்மையாக மாணவர்களுக்குப் போதிக்க முடியுமா?

### செய்யுளைப் போதிக்க முடியுமா?

உண்மையாகக் கவனித்துப் பார்த்தால் செய்யுளைப் போதிப்பது முடியாத காரியமாகும். செய்யுளின் முழுப் பொருளையும் ஆசிரியர் எடுத்துக்காட்ட முடியாது. ஏனென்றால் செய்யுளின் இசை எல்லையற்றதோடு பொருளும் பிறவும் வெகு சூக்ஷ்மமானவை. உண்மை உணர்ச்சி, சிரத்தை, கற்பனைத்திறம், நுண்ணறிவு, பரந்த மனப்பான்மை ஆகிய இவை செய்யுளின் உட்கருத்தையும் மேன்மையையும், வெளிப்படுத்தும் தன்மைகளாதலால் எல்லோருக்கும் இவை எளிதில் அமைந்திரா. கலைப்பொருளில் அடங்கிய அழகு என்பது எல்லோருக்கும் எளிதில் புலப்படாது. ஆனால் செய்யுள் தன்மையை மாணவர்களுக்கு உணர்த்த ஆசிரியர் ஒன்று செய்யலாம். செய்யுளின் மேன்மையையும், அழகையும், மாணவர்கள் அறிந்துகொள்வதற்கு வேண்டிய பல சந்தர்ப்பங்களை உண்டாக்கலாம். இத்தகைய நிலைமைகள் ஒருவிதமாக மாணவர்களுக்கு செய்யுளின் குணத்தைக் காட்டும். மேலும் கலைப்பொருள் இன்பத்தை ஒவ்வொருவனும் ஒவ்வொருமாதிரித் தனித்தனியேதான் உணர வேண்டும். எடுத்துச் சொல்ல முடியாது. ஒரு கவிஞனுடைய உயர்ந்த நிர்மாண வேலையாகிய கவியின் "உள்ளம்" சில ஆசிரியருக்கு மாத்திரமே தெரியும். இனி ஆசிரியருடைய நோக்கம் என்னவாக இருக்கவேண்டும்?

### ஆசிரியரின் நோக்கம்.

செய்யுளின் முழுத்தன்மையையும் ஆசிரியர் போதிக்க முடியாது என்பதையும், ஆனால் சில நிலைமைகளை மாத்திரம் உண்டாக்கி அவற்றின் உதவியால் மாணவர்கள் செய்யுளின் தன்மையை ஒருவாறு அறிந்துகொள்ளலாம் என்றும் சொன்னோம். இவற்றை விரிவாகக் கவனிப்போம். செய்யுளானது இன்பந்தரும் ஒரு கலைப்பொருள். படிப்போர் மனதைக் கவர்வதற்கு வேண்டிய இசைப்பொருளும், புலன்களைக் கிளர்ச்சிசெய்து பேருணர்ச்சியை உண்டாக்கக் கவிஞருடைய கற்பனைகளும், எந்நாளும் அழியாத தன்மைவாய்ந்த உண்மைப்பொருளும், படிப்

போர் கற்பனைசக்தியைக் குதூகலம் செய்து கற்பனை உலகத்தில் உலாவிக் கொண்டிருக்க, மகத்தான இயற்கை வருணனைகளும், நாம் படித்தபின் நம் மனத்தில் தாக்கி, நல்ல ஒழுக்க விதிகளில் ஈடுபடுத்தும் உயர்ந்த நீதிப்பொருளும், தனித்தனியே ஒவ்வொருவரும் சிந்தித்து அகமகிழ்ந்து கொண்டிருக்க, கவிஞரின் கருத்துப்பொருளும், பொருளை மறக்காமலிருக்கவும் பல பொருட்களையும் தரும்படியான அழகான சொல்லழகும், செய்யுட்களில் அடங்கிஇருப்பதால் எந்தப்பாகத்தை எடுத்து ஆசிரியர்கள் போதிப்பது? (1) செய்யுளை வெறும் மொழிப்பயிற்சிப்பாட நிலைமைக்குக் கொண்டுவந்து கலைப்பொருளின் அழகைப் பிரித்துக் காட்டுவதற்குப் பதிலாக, பதஉரை பொழிப்புரை, இலக்கணக்குறிப்பு முதலியவற்றை மாணவர் வேண்டாவண்ணம் அவர்களுடைய மனத்தில் திணித்து உற்சாகத்தைக் கெடுக்கக்கூடாது. (2) சிறுவர்களுக்குச் சுபாவமாக இருக்கும் சற்பனைசக்தியை வளர்ப்பதற்குச் செய்யுள் ஒரு சாதனமாக இருப்பதால், அதில் அடங்கிய கற்பனை, கதை, சொற் சித்திரம் ஆகிய இவற்றினை விரிவாகச் சொல்வது நல்லதாகும். (3) இயற்கை விநோதங்களில் காணும், அழகுப்பொருளை அடிக்கடிக் கண்டு அதில் சந்தோஷம் அடைய, மாணவர்களின் உற்றுநோக்கும் சக்தியைப் பெருக்கவேண்டும். இதற்காகச் செய்யுளில் இருக்கும் இயற்கை உபமானங்களை அரும்புலவர்கள் எவ்வாறு அழகுபெற எடுத்துக்காட்டி இருக்கின்றனர் என்பதை ஆசிரியர்கள் சொல்லவேண்டும். (4) உண்மைகளும் ஒழுக்கத் தத்துவங்களும், ஒருவனுடைய வாழ்க்கைக்குப் பிற்காலங்களில் உபயோகப்படக்கூடிய நீதிகளும், திருக்குறள் நாலடியார் முதலிய சிறந்த செய்யுள் நூற்களில் இருப்பதால் அவற்றினை மனப்பாடம்பண்ணுவித்து ஞாபக சக்தியையும் வளர்க்கவேண்டிய கடமை ஆசிரியரதாகும். (5) வாழ்நாட்களில் ஒவ்வொருவனுக்கும் சோர்வு நிலையும் பிறவும் உண்டாகக் கூடும். இத்தகைய தருணங்களில் உண்மையான கலைகளே எல்லாவற்றையும் நீக்கும். சிறந்த கவிஞர்களுடைய செய்யுட்கள், தெய்வநம்பிக்கை, பொறுத்துக்கொள்ளும் சக்தி, மெய்யுணர்வு, உலகவியல்பு ஆகிய இவற்றைக் காட்டி மனநிலையைச் சாந்தமடையச் செய்கின்றன. ஆகையால் இத்தகைய செய்யுட்களை மாணவர்கள், தாங்களே படித்துக்கொண்டு இன்பமடைவதற்கு வேண்டி முறைகளைக் காட்டவேண்டும். (6) உயர்ந்த கருத்துக்களைப் புலவர்கள் எப்படிச் சொல்லுகின்றார்களோ அப்படியே சொல்லிக் காட்டப் பிள்ளைகளைப் பழக்குவிக்கவேண்டும். (7) செய்யுள் பாடத்தில் பரீட்சைவைப்பது நல்லது அன்று. ஏனென்றால் பரீட்சைக்கு வேண்டியவற்றை தான் மாணவன் படிக்கின்றானே தவிர, கலைப்பொருளை உணர்வதற்கு வேண்டிய மனநிலையை அவன் விருத்தியாக்கிக் கொள்வதில்லை. இத்தகைய நோக்கங்களை ஆசிரியர் அடைவது எப்படி?

**செய்யுள் திரட்டு முறை—பொருளும் நடையும்.**

மாணவர்களுக்கு உற்சாகம் ஊட்டவேண்டுமாயின் ஒவ்வொரு ஆசிரியரும் செய்யுட்களை நிரம்பப் படித்திருக்கவேண்டும், படித்தபின்பு,

செய்யுட்களை ஆசிரியர் ஒரு முறைப் பிரகாரம் வகுத்துத் திரட்டவேண்டும். இப்படித் திரட்டும்போது மாணவனுடைய வயது, அவன் அனுபவம் செய்யுட் பொருளின் தன்மை, அதன் நடை, அதில் அடங்கிய கதை, நீதி, உண்மை, வருணனை முதலிய பொருட்கள் ஆகிய இவற்றைச் சீர் தூக்கிப் பார்ப்பது ஆசிரியரின் விசேஷ வேலையாகும். கிராமத்தில் வசிக்கும் மாணவர்கள் இயற்கை வருணனை நிரம்ப அடங்கிய ஔவையாரின் செய்யுட்களாகிய "நல்வழி", "வாக்குண்டாம்" முதலியவற்றை நன்றாகக் கண்டு தெரிந்துகொள்வார்கள். ஆனால் பெரிய பட்டணங்களையும், உயர்ந்த நீதிகளையும் வருணித்துக் கூறும் செய்யுட்களின் பொருளை அறியார்கள். எனவே முதன் முதல் செய்யுட்களை வகுக்கும்போது பிள்ளைகளின் சுற்றுப்புற வாழ்வு, அனுபவம் முதலியவற்றை நோக்கம் கொண்டு வகுக்கவேண்டும். இரண்டாவதாகப் பிள்ளைகளின் மனத் தன்மை, வயது முதலியவற்றிற்குத் தகுந்தாற்போல் செய்யுட்களைப் பிரித்திடவேண்டும். பத்து வயது மாணவனுக்குக் கம்ப ராமாயணத்தின் அழகு, மேன்மை, முதலியன புலப்படா, அல்லது கல்லூரி மாணவன் "கீரியும் பாம்பும்" என்னும் கதைச் செய்யுளைப் படிப்பதில் விருப்பங்கொள்ளான். மூன்றாவதாக வெறும் நீதிப் பொருள் அடங்கிய செய்யுட்களை எப்போதும் திரட்டி வைக்கக்கூடாது. இத்தகைய செய்யுட்களில் ஒருபோதும் மாணவர்களுக்கு உற்சாகம் ஏற்படாது. அனுபவ விஷயங்களும், எளிய நீதிகளும், எளிய இயற்கை வருணனைகளும் அடங்கிய செய்யுட்கள், ஒருவாறு உற்சாகம் தரினும் இவற்றை முதல் வகுப்புப் பிள்ளைகளுக்குக் கற்பிப்பது உசிதமன்று. நான்காவதாக, மாணவர்களுடைய கற்பனைக்கும் அனுபவத்திற்கும் அடங்காத பொருளாகிய, காதல் சம்பந்தமான செய்யுட்களை வகுப்பில் அழுத்தமும் திருத்தமுமாக விவரித்துச் சொல்வது நன்றன்று. காதல் உணர்ச்சி ஒரு நிலையில் தான் ஒருவனுக்கு உண்டாகிறது. இத்தகைய எண்ணத்தை ஆசிரியர் தங்கள் மாணவர்களுடைய மனத்தில் புகுத்தியோ, கிளர்ச்சி செய்தோ விடுவாராயின் அது அவர்களைக் கலக்கிவிடும். ஐந்தாவதாகச் செய்யுளானது வாழ்க்கை இலட்சியத்திற்குச் சம்பந்தப்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்து அதைப் படிப்படியாக வகுக்கவேண்டும். கடைசியாக செய்யுள் நடையையும் கவனித்து வகுக்கவேண்டும். எளிய நடையாகிய வெண்பா, சிந்து, குறவஞ்சி, சந்தம் நிறைந்த சதகங்கள் முதலியவற்றைச் சிறுவர்கள் அதிகமாக விரும்புவார்கள். பெரிய மாணவர்கள், அந்தாதி, விருத்தப்பா, ஆசிரியப்பா முதலியவற்றை விரும்புவார்கள். ஆகையால் மாணவர்கள் விரும்பக்கூடிய செய்யுள் நடைகளை அடிப்படையாகக்கொண்டு அதன் பிரகாரம் வகுத்திட்டால் செய்யுள் படிப்பதில் அவர்கள் ஊக்கம் அடைவார்கள். எளிதிலும் புரிந்துகொள்வார்கள்.

**சிறுவர்களுக்கான செய்யுளின் தன்மை**

பொதுவாகச் சிறுவர்கள் உணர்ச்சி நிலையையும், கற்பனை உலகத்தில் இன்பமாகக் காலம் கழிக்கும் நிலையையும், அனுபவத்திற்கு ஒத்த செயல் தன்மை ஞாபக நிலையையும் விரும்புகின்றார்கள். உடலைக் கிளர்ச்சி செய்து குதூகலமூட்டுவது இசைப் பொருள் இவ்விசைப் பொருளும் விளங்காத சொற்களினால் உண்டானால் பலன் இல்லை. தெரிந்த சொற்களின் மூலமாய் உயர்ந்த கருத்தை இன்னிசை மூலமாகப் பாரதியார் தம் "நாட்டுப் பாட்டிலும்" "பாப்பா பாட்டிலும் புதுமைப் பொருள் நிரம்ப எழுதி இருக்கின்றார். இப்பாட்டுகளின் இந்திய தேசத்தின் பெருமை, அழகு, நாகரிகம் முதலியவற்றோடு இந்தியரின் வீரம், உதாரண குணம், உயர்ந்த சிந்தனை, முதலியவற்றையும், அழியாத தெய்வப் பற்றையும் நாம் காணலாம்,

"பாருக்குள்ளே நல்ல நாடு" "செந்தமிழ் நாடென்னும் போதினிலே" "மன்னும் இமயமலை" "ஆதிசிவன் பெற்றெடுத்தான்" முதலிய பாட்டுகளில் இசை இன்பம் ததும்பி கிடப்பதோடு அவற்றைப் படிப்போர் உள்ளம் அசைந்து பேரானந்தமடைகிறது. பஞ்சதந்திரக் கதைகள் போன்ற சிறு கதைப் பகுதிகளும், கண்ணன் பாட்டுப் போன்றதும், பிராணிகள் பறவைகள் ஆகியவைகளைப்பற்றிய சிறு கதைச் செய்யுட்களும் சுலபமான நடையில் எழுதப்பட்டு, தாளத்திற்கு தகுதியாக இருப்பின், இவற்றைச் சிறுவர்கள் பாடிக்கொண்டே உற்சாகத்தோடு படிப்பார்கள். தேசிங்கு இராசன் குதிரையாகிய நீலவேணியைப் பற்றி வருணித்துக் கூறி அது ஓடும் விதத்தையும் சந்தத்தோடு படித்துக் காட்டினால், அது சிறுவர்களுக்கு எவ்வளவு இன்பத்தை ஊட்டுகிறது? எனவே சிறுவர்களுக்கு வகுக்கப்பட்ட செய்யுட்கள் பாட்டாக இருப்பதோடு கதைப் பொருள், தாளக்கட்டு, சந்த அமைப்பு, தெரிந்த உபமானப் பொருள், எளிய சொல் அமைப்பு ஆகிய இவை இருக்கவேண்டும். செய்யுட்கள் அதிக நீண்ட அடிகளை உடையனவாகவும் இருக்கக்கூடாது, ஒரு சொல்லையே அடிக்கடி சொவ்வதனாலும் முரண்படச் சொல்வதனாலும், பிராசத்தோடு சொல்வதனாலும், திரிபாகச் சொல்வதனாலும் உணர்ச்சி பெற்று சந்தோஷம் அடைகின்றான்.

"கற்கை நன்றே கற்கை நன்றே" "அடினும் ஆவின்பால்" "சுடினும் செம்பொன்," "சிந்தை துணிந்த தெலுங்கர்," (பாரதியார்) அருணசலக் கவிராயர் இயற்றிய இராம நாடகக் கீர்த்தனையில் அடங்கிய "மகுடாபிஷேகம் கொண்டானே" "ஏன் பள்ளிகொண்டீர்" "குத்துக்கு நீ வாடா ராவணா" முதலியவை பிள்ளைகளுக்கு உண்மையாகவே உற்சாகத்தைத் தரும். மேலும் சிறு பிள்ளைகள் உண்மைப் பொருளைப் பற்றிச் சிந்திக்கமாட்டார்கள். அவர்களுக்கு வேண்டியதெல்லாம் தெரிந்த அழகுப் பொருள். பாரதியார் "நிலா" "காற்று" "மேகம்" "புயல்" "ஆறுகள்" "மலைகள்," "சோலைகள்," "கோயில்

கள்," "இடி," "மின்னல்," "பருவங்கள்," செம்படவர், உழவர், தொழிலாளி, உருவச் சிலைகள், முதலியவற்றை வெகு அழகாக எளிய நடையில் சிறுவர்கள் மனப்பான்மைக்கு ஒத்தாற்போல் எழுதி இருக்கிறார். இவற்றை ஆசிரியர்கள் உபயோகித்துக் கொள்ள வேண்டும்.

## செய்யுட்களை வாசித்தல்

மேற்கூறிய வண்ணம் செய்யுட்களை வகுத்து ஒரு முறையில் அமைத்திட்ட பின்பு அவற்றைப் படித்துக் காட்டுவது மிகவும் விசேஷமாகும். ஏனென்றால் ஆசிரியருடைய குரல் எப்போதும் செய்யுளில் அழுந்திக் கிடக்கும் "ஜீவப் பொருளை" வெளியாக்குகின்றது. வெளியான நாதப்பொருள் மாணவர்களுடைய செவிகள் மூலமாய்ச் சென்று பற்பல உணர்ச்சிகளை உண்டாக்குகிறது. ஒரு சொல் பல இனிய தொடர்ச்சியான பொருள்களை மனத்தில் உணர்த்தலாம்; ஒரு காட்சியை மனக்கண் முன்பாகக்கொண்டு வரலாம், வேறு ஒரு இசையை நினைப்பூட்டலாம். அந்த இசையோடு சம்பந்தப்பட்ட ஒரு சந்தர்ப்பத்தை ஞாபகத்திற்குக் கொண்டு வரலாம். பற்பல பொருட்களையும் தெளிவான வாசிப்பானது சுட்டிக் காட்டலாம்.

எனவே ஆசிரியர் அழகாகவும், இனிமையாகவும் தெளிவாகவும், சொற்களைப் பிரித்தும், பொருள் விளங்கும் தன்மையாகவும், வேண்டிய இடங்களில் நிறுத்தியும், சைகைகள் காட்டியும், பலமுறை படிப்பதனுல் மாணவர்கள் செய்யுளின் அழகை இயல்பாக உணர்ந்துவிடுகின்றுர்கள். உற்சாகம் பெற்ற மாணவர்கள் ஒருபோதும் செய்யுளை மறக்கமாட்டார்கள். பலமுறை படிப்பதனுல் பொருள் விளங்குவதோடு புதுப் புதுப் பொருளும் தோன்றலாம். படிக்கும் மாதிரி செய்யுளின் தன்மையைப் பொறுத்திருப்பதனுல் ஆசிரியர் இதைக் கவனிக்கவேண்டும். செய்யுளைப் படிக்கும்போது ஆசிரியர் அடிக்கடிப் புத்தகத்தையே பார்க்கக்கூடாது. மாணவர்களும் அப்படியே புத்தகத்தைப் பாராமல் ஆசிரியர் சொல்வதைக் காதின்மூலமாகக் கேட்கவேண்டும். செய்யுள் இன்பம் முதன் முதல் செவியின்பந்தான். ஆகையால் அழகான வாசிப்பே முதன்மையான முறை.

## போது.

செய்யுளை மொழிப் பயிற்சிக்கென கருதாமல், கலைப் பயிற்சிக்கு நினைக்கவேண்டும். அதிகக் கஷ்டப்படுத்தி மாணவர்களைச் செய்யுள் படிக்கச் செய்வது உசிதமல்ல. அறியாத விஷயங்களையும், தவறானவற்றையும் பிறவற்றையும் இளமனத்தில் புகுத்த செய்யுளைச் சாதனமாகக் கருதக்கூடாது. ஆசையையும், ஆர்வத்தையும், அடக்கக்கூடாது. கூடுமான வரையில் இசையோடு செய்யுளைப் பாடுவது நல்லது. இனிய குரல் இல்லாதவனை வற்புறுத்தி வகுப்பில் வெட்கமுறச் செய்வது, நல்லதல்ல.

(தொடரும்)

# அனுபவக் கனிகள்

**P. N. Kalyanasundaram,** *Headmaster, Bd. Ele. School, Kayappakkam.*

## 3. பள்ளிக்கூட அலங்காரம்

அன்பர்களே!

ஒரு சிறு குடிசை. அதைச் சுற்றிலும் வெகு சுத்தமான தரை வெளிப்புறம் யாவரையும் வரவேற்பதற்கு அழகிய பூஞ்செடிகள். வாயிலில் முல்லைக்கொடி படர்ந்து மாலை நேரம் கம்மென்று வாசனை. வீட்டிற்குள் அந்தந்த பண்டத்திற்கேற்ற இடத்தில் அது அது வைக்கப் பட்டிருக்கிறது. சில கடவுட்படங்கள் - சிறிய ஷெல்ப் - புத்தகங்கள் அழகுற அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. ஒரு மேஜை இரண்டு நாற் காலிகள் இப்படியாக உள்ளது ஓர் அழகிய சிறு குடிசை.

அதே வீதியில் சற்றுத் தூரத்தில் புதர்களடர்ந்த இடம். நெரிஞ்சுமுட்களுடன்கூடிய தரையைக் கடந்து சென்றால் ஒரு இரண் டடுக்கு உள்ள பாழடைந்த பங்களா. எங்கும் ஒட்டடை குப்பை ஆனா லும் மனிதர்கள் வாசஞ்செய்கிறார்கள். மாலைநேரம் ஒரே இருட்டு. ஒரு மூலையில் சற்றுப் புழங்குவதற்குமட்டும் சுத்தமான இடம். விளக்கு மினுக்கு மினுக்கு என்று எரிகிறது. உள்ளே வசிப்பவர் மகா கையழுத் தக்காரர். பணக்காரர்தான். சுகாதாரம் என்றால் விலை எவ்வளவு என்பார். சுத்தம் செய்வதென்றால் ஆட்கள் வேண்டாமா? பணச் செலவு அல்லவா?

நிற்க நாம் அங்குச் செல்வதாக வைத்துக்கொள்வோம். சிறு குடிசை நம்மை வரவேற்பதுபோலக் காண்கிறதல்லவா? அழுக்கும், குப்பையும் அகற்றாத மாளிகையைக் காட்டிலும் சுத்தமாய் வைக்கப் பட்ட எளிய குடிசையைத்தான் யாவரும் விரும்புவர்.

அதுபோல் நமது பாடசாலை ஒரு கூரைக் கட்டிடமோ, பிளான் கற்கட்டிடமோ அல்லது ஒரு வாடகை வீடோ எதாக இருந்தாலும் இருக்கட்டும். அதை வசீகரத் தோற்றமுள்ளதாக வைத்துக்கொள்ளல் நமது கடன். மதிற்சுவருடன்கூடிய மெத்தைக் கட்டிடம் எந்த ஆரம்பப் பாடசாலைக்கும் கிடையாதென்பது திண்ணம். ஆகவே மேற் சொன்ன உதாரணத்தைக் கடைப்பிடிப்போம்.

ஆசிரியர்களாகிய நாம், பாடசாலையை நமது சொந்த வீடாக நினைத்தல் வேண்டும். பாடசாலையானது பெற்றோரையும் மற்றோரையும்

'வாருங்கள் எங்கள் கலா நிலையத்தை வந்து பாருங்கள்' என்று அழைக்கும் வண்ணம் வைக்கப்படல் வேண்டும். பாடசாலையின் உட்புறமும், சுற்றுப்புறமும் தூய்மையாக இருந்தலே ஒரு வசீகரத்தோற்றத்தை யளிக்கும். ஜன்னல்கள் வழியே குழந்தைகள் மணிலாக் கொட்டைத் தோல், சிறு காகிதத்துண்டுகள், புத்தகங்களிலிருந்து அகற்றிய காகித உறைகள் இவற்றை ஆசிரியர்கள் அறியாதபடி வெளியே எறிவது எல்லாப் பாடசாலைகளிலும் தினசரி நடைபெறும் காரியம்.

இச் சிறுவிஷயத்தை ஆசிரியர்கள் கண்காணித்து அவ்வப்போது குழந்தைகளை இதமாகக் கண்டித்து வருவதுடன் பள்ளியின் பெரிய வகுப்புக் குழந்தைகளின் உதவியால் உள்ளும் புறமும் வெகுதூய்மையாக இருக்கும்படி செய்யவேண்டும்.

உதாரணமாகப் பின் வரும் பதவிகளை சிறுவர்களுக்கு அளித்தல் மூலம் பாடசாலையைத் தூய்மையாக வைத்துக்கொள்ள முடியும்.

| | | | |
|---|---|---|---|
| IV வது | வகுப்பு | C. ராஜகோபாலன் | —வகுப்பறை சுத்தத்திற்குப் பொறுப்பாளி |
| III வது | ,, | D. முனுசாமி | —ஜன்னல்களின் சுத்தம் |
| III வது | ,, | S. கோவிந்தன் | —ஜன்னல்கள் திறந்து கொக்கிகள் போட |
| V வது | ,, | R. கணபதி<br>M. ஸ்ரீனிவாசன் | —வெளிப்புறச் சுத்தம் |
| V வது | ,, | K. ராமன் | —மியூசியம் மேஜையை ஒழுங்குபடுத்தல் |

இதுபோன்று சிறு உத்தியோகங்களை நல்ல கெட்டிக்காரக் குழந்தைகளுக்குக் கொடுத்தல் அவர்களுக்குள் போட்டியும் பணியில் ஆர்வம் ஊட்டல் முதலியனவும் அனுபவத்தில் வெகு நன்மை பயக்கும்.

அடுத்தபடியாக பள்ளிக்கூட அலங்காரம் என்பது என்ன? அதை எவ்வண்ணம் செய்வது என்பதைக் கவனிப்போம். பள்ளிக்கூடம் கவர்ச்சியுடன் விளங்கவேண்டும் என்பதுதான் இதன் நோக்கம். அதற்காக என்ன? அழகிய படக் காலண்டர்கள் ஒரு டஜன், கிருஷ்ண லீலா ரவிவர்மா படங்கள் ஒரு டஜன் மாட்டிவிட்டால் போதும். ஆனால் இத்தகைய அலங்காரம் பள்ளிக்கூடத்திற்குப் பொருந்தாது. ஆகவே பள்ளியில் உள்ள ஒவ்வொரு படமும் அழகு அறிவு இரண்டிற்கும் துணை செய்வதாக அமையவேண்டும். பள்ளிக்கூடத்தை அழகுற அமைப்பதற்குக் கீழ்க்கண்ட குறிப்புக்களைக் கொடுத்து மீதியை நேயர்களின் ஆராய்ச்சிக்கு விட்டுவிடுகிறேன்.

1. வகுப்புக்களை அழகாக அமைத்தல்—ஒரு வகுப்புக்கும் மற்றொரு வகுப்புக்கும் இடைவெளி, போகும்வழி, வரும்வழி கரும்

பலகைகள் இருக்கும் இடம் முதலியன ஒழுங்குடன் இருத்தல் கவனிக்கப்படல் வேண்டும்.

2. மியூசியம் டேபிள்—ஒழுங்குற அமைக்கப்பட்டு அவ்வப்போது கவனித்து வரப்படல் வேண்டும். சுத்தமாக வைக்கப்படல் வேண்டும்.

3. பழமொழிகள்: சுவர்களில் பொறுக்கி எடுக்கப்பட்ட சில பழமொழிகள் அழகிய பெரிய எழுத்துக்களில் நிரந்தரமாக எழுதப்பட்டிருத்தல்—அல்லது நீண்ட அட்டைகளில் எழுதி மாட்டப்படல் நல்லது. பொருள் விளங்காத—நீண்ட வாக்கியங்கள், அனுவசியமான வாக்கியங்கள், வேதாந்திகளுக்கு வேண்டிய வாக்கியங்கள் முதலியன அகற்றப்படல் வேண்டும்.

உ-ம். பள்ளிக்கணக்குப் புள்ளிக்கு உதவாது
ஆறிலுஞ் சாவு நூறிலுஞ் சாவு
தேகம் அநித்தியம்

—என்பன போன்ற பழமொழிகள் கூடாது. கல்வி, சுகாதாரம், இவை சம்பந்தமான சில வாக்கியங்களே போதும். நூற்றுக்கணக்கான பழமொழிகள் சுவர் முழுவதும் எழுதுதலும் அறிவுடைமை யாகாது. வகுப்புக்குத் தகுந்தபடி பழமொழிகளை அந்தந்த வகுப்புச் சுவர்களில் எழுதுவது நல்லது. சுவற்றில் உள்ள பழமொழிகளைப் படங்களால் மறைக்கக் கூடாது.

4. படங்கள்: சரித்திரம், பூகோளம், தேகசாஸ்திரம் பிராணி சாஸ்திரம் கணிதம் முதலிய தனித்தனி பாடங்களுக்கென்று தயாரித்த படங்களை பள்ளிக்கூடம் முழுவதும் நிரவித் தொங்கவிடுவதும் நல்லதல்ல, வகுப்புக்கேற்ற படங்களை அந்தந்த வகுப்புகளில் எல்லாக் குழந்தைகளுக்கும் தெரியும் வண்ணம் தொங்கவிடுதல் கவனிக்கத்தக்கது. பாடவாரியாகவும், சுவற்றில் தொங்கவிடுதல் வேண்டும் இங்கொன்றும் அங்கொன்றும், நினைத்த உயரத்திலும படங்கள் காணப்படுவது அழகைக் கெடுப்பதாகும். வரிசை கெடாமல் இடைவெளி சமமாக இருக்கும் வண்ணம் படங்களை மாட்டவேண்டும். சுவற்றில் மனம் போனவாறு ஆணி அடித்தல் அழகைக் கெடுப்பதாகும்.

5. நிரந்தரமான படங்கள்: பள்ளிக்கூட 'பிளான்', கிராம பிளான் **Statestic Board** என்று சொல்லும் பாடசாலை விவரம் அடங்கிய சார்ட்டு, கால அட்டவணை, தேக்கஜாபிதா முதலியவைகளும். தவளையின் வளர்ச்சி, கொசுவின் வளர்ச்சி, வண்ணாத்திப்பூச்சியின் வளர்ச்சி முதலிய படங்களும் எப்போதும் நிரந்தரமாகவே பாடசாலையில் காணப்படவேண்டு மாதலால் இவற்றைத் தடித்த அட்டைகளில் ஓரங்கள் அழகுற வர்ணக்காகிதத்தால் ஒட்டி ஒவ்வொரு வகுப்பிலும் தொங்கவிடின் ஒரு வசீகரத் தோற்றத்தைக் கொடுப்பதுடன், ஆசிரியர்

களின் உண்மையான சிரத்தையையும் அதிகாரிகளுக்கு எடுத்துக்காட்டுவனவாகும்.

6. **விசேஷப் படங்கள்:** பாட சம்பந்தம் தவிற ஆசிரியர்களுக்குக் கிடைக்கும் படங்கள் அறிவூட்டத் தக்கவைகளாக இருப்பின் அவைகளைக் கொண்டும் பள்ளிக்கூடச் சுவற்றை அலங்கரிக்கலாம். அவையாவன :—

(i) நல்ல திடகாத்திரமான—குழந்தைகளின் படங்கள்

(ii) ,, —மனிதர்களின் படங்கள்

(iii) நவீன யந்திரசாதனங்கள்—தீயணைக்கும் யந்திரம் —ரோட்டு போடும் யந்திரம் etc.,

(iv) நீர் வீழ்ச்சிகள், எரிமலைகள் முதலிய இயற்கைக் காட்சிப் படங்கள் etc.,

7. **தினசரிவாழ்க்கைச் சித்திரங்கள்:** சிறுவகுப்புகளுக்கு-கிராமத் தொழிலாளிகளின் படங்கள், அரிசியின் கதை—கார்டின் பிரயாணம் கோயில்—மசூதி—சர்ச்சு இவற்றின் பெரிய படங்கள் செக்கு—கரும் பாலை—தறி—நீர் இறைக்கும் யந்திரம் உயர்ந்த கட்டிடங்கள்—நியூயார்க், லண்டன் முதலிய இடங்களில் உள்ளவை. பாகுபடுத்திக்காட்டல் (உ-ம்). குடிசை—வீடு—மாடி வீடு—அடுக்குமாடி தாஜ்மஹால்—தஞ்சாவூர் கோபுரம்—போன்ற சரித்திர சம்பந்தமானவை நம் நாட்டுக் கோயில்களின் படங்கள் முதலியன பொது அறிவை வளர்க்கக்கூடியவை.

8. **தோரணங்கள்:** கலர்காகிதம் இப்போது அதிக விலை. விலை குறைந்தாலும்கூட விசேஷ விழாக்காலங்களில் மட்டும் காகிதத் தோரணங்களைப் பாடசாலையில் உபயோகிக்கலாமே தவிற—எப்போதும் இருக்கும்படி அவைகளைப் பாடசாலை அலங்காரத்திற்கு உபயோகப் படுத்தக்கூடாது. ஏனெனில் அவைகள் ஆடம்பரமான தோற்றம் அளிப்பதுடன் அவற்றில் நாளாவட்டத்தில் ஒட்டடை படிவதால் அவை கூடாது மேற்கண்ட குறிப்புக்களைக் கொண்டு பாடசாலையை வசீகரத் தோற்றமுள்ளதாக வைப்பது ஆசிரியர்களின் ஊக்கத்தையும் பொருத்ததாகிறது.

# தாய்மொழி கற்பித்தல்—(கதை)

க. அருணாசலம், பீ. ஏ., எல். டி.

சிவராணிக்கு ஐந்து வயதிருக்கும். அழகாகப் பேசுவாள். பேசு பவர்களுடன் குறுக்குக் கேள்விகள் போட்டுக்கொண்டே இருப்பாள். ஒரு நாள் மாலை அவளுடன் நெடுந்தூரம் நடந்துபோனேன். திரும்பும் பொழுது நடக்க முடியவில்லை என்று சொல்லி உட்கார்ந்து கொண்டாள். தூக்கிக்கொண்டு திரும்புவது சாத்தியமாய் இல்லை. எனக்கொரு யோசனை தோன்றியது. நீ நடந்து வந்தால் ஒரு கதை சொல்லுகிறேன் என்றேன். அந்த யோசனையை அவள் உடனே ஏற்றுக்கொண்டாள். கழகத் தமிழ்க் கதைக் கொத்திலிருந்து நான் சிறுவர்களுக்கெனக் கற்று வைத்திருந்த "மத்தளமும், ஆட்டுக்குட்டியும்" என்கிற கதையைச் சொல்ல ஆரம்பித்தேன். களைத்துச் சலித்து இனி நடக்க முடியாது என்று உட்கார்ந்தவள், இரண்டு மைல்களுக்குமேல் நல்ல வேகத்துடன் நடந்தாள். வெறும் நடை மட்டுமல்ல. எத்தனை குறுக்குக் கேள்விகள். இடை இடையே சந்தர்ப்பங்களைத் தெளிவு செய்வதற்காக விமர்சனங் கள்! கொஞ்சம் நிறுத்தினாலும் விடமாட்டாள். நானும் கதையிலேயே என்னை மறந்துவிட்டேன். வீடு வந்து சேர்ந்தோம். நடந்து வந்த தூரத்தை நினைத்துப் பார்த்து நான் அதிக ஆச்சரியப்பட்டேன். இவ்வளவு தூரம் நடந்து வரும் ஆற்றல் சலித்திருந்த குழந்தைக்கு எங்கிருந்து வந்தது? நான் சொன்ன கதைதான் பெட்ரோலும் தண்ணீரும்போல் வேலை செய்திருக்கவேண்டும். கதைகளின் மூலம் மனமும், உணர்ச்சியும் வளர்ந்து விசாலிக்கின்றன என்பது பலர் அறிந்தது. கதை தேக சக்தியை அதிகப்படுத்துகிற தென்பது நான் என் அனுபவத்தில் கண்டது.

கதையின் சக்தி எல்லையற்றது. இது சிறுவர்களை மட்டுமல்ல, மனித ஜாதியையே கவரும் தன்மையது. மனம், மொழி, மெய் இம் மூன்றுமே பிடாரனின் குழல் கேட்ட பாம்பைப்போல கதை ஆட்டு வித்தபடி யெல்லாம் ஆடுகின்றன. மனிதனை வசிகரிக்கும் இவ்வற்புத சக்தியை மனித வளர்ச்சிக்குக் கல்வியாளர்கள் அறிந்தே உபயோகித்து வந்திருக்கின்றனர். புராணங்களும் இதிகாசங்களும் மனித வர்க்கத்தை ஆளுகின்றன. இன்றைக்குப் பத்திரிகை உலகில் சிறு கதைகளை அள்ளிப் பரிமாறும் பத்திரிகைகளே செழித்தோங்குவது யார் அறியாதது? பாட்டிகள் இந்த ரகசியத்தை அறிந்துதான் போலும் சிறுவர்களுக் கேற்ற கதைகளைச் சொல்லி அவைகளின்மூலம் அவர்களின் அன்பிற்குப்

பாத்திரமாகி வந்திருக்கின்றார்கள். சில சமயங்களில், தூண்டிலில் சிறு புழுவைப் போட்டு பெரும் மீனைப் பிடிப்பதுபோல் இப்பாட்டிகள் சிறுவர்களின் மனதைக் கதைகள் மூலம் இஷ்டப்படி மாற்றியிருக்கின்றனர்.

இத்தகைய கவர்ச்சி வாய்ந்த கதையினை நோக்கத் தெளிவுடனும் சரியான முறையுடனும் சிறுவர் பயிற்சியில் கையாண்டால் பெரும் பயன் அடையலாமென்பது திண்ணம். சில வருஷங்களாகத் தான் இதைப் பற்றி ஆரம்பக் கல்வியாளர்கள் சிந்திக்கத் தொடங்கி யிருக்கின்றனர். இதற்கு முன்னே கதையையும் ஒரு தனிப்பாடப் பகுதிபோல் சேர்த்து ரசமற்ற முறையில் மாணவர்களுக்குப் புகட்டி வந்தனர். தற்கால மனோ விஞ்ஞானிகள் தாம் கதையின் சர்வ வல்லமையையும் வெளிக்கொண்டு வந்துள்ளனர். தகுந்த முறையில் கையாண்டால் இதன் துணைகொண்டு கற்கும் கல்வியைப் பயனுடையதாகவும் நிலைத்து நிற்கத் தக்கதாயும் செய்துவிடலாம். இதுகாறும் ஆரம்பக் கல்வியில் பெரும் பகுதி வீணாகப் போகிறதென்றே கணக்கெடுத்திருக்கின்றனர்.

கற்றலின் நியதிகளை அனுசரித்துப் பயிற்றல் நடந்தால், இக்குறை பெரும்பாலும் அழிந்துபோம். எதை மனமுவந்து கற்கிறோமோ அதுதான் கற்கப்படுகிறது, மற்றவை நிலைப்பதில்லை என்பது முதல்விதி. எதன் முடிவு வெற்றிகரமாகவும் இன்பமாகவும் இருக்கிறதோ அதைக் கற்கிறோம் என்பது இரண்டாவது விதி. மனதிற்குகந்ததை, இன்பமளிப்பதைத் திரும்பத் திரும்பச் செய்து அதை நிலைபெற்றதாகச் செய்து கொள்ளுகிறோமென்பது மூன்றாவது விதி. இயற்கை நியதிகள் எங்ஙனம் சிறிதும் தவறாமல் இயற்கையுலகில் வேலை செய்கின்றனவோ அங்ஙனமே இவ்விதிகள் கல்வியுலகில் வேலை செய்கின்றன. இச்சட்டங்களைப் புறக்கணித்தோ அல்லது அறியாமையினாலோ தண்டோபாயத்தின் மூலம் பயத்தின், அடிப்படையின்மீது குழந்தைகளின் மனதில் இதுகாறும் கட்டப்பட்டு வந்த அறிவுக் கோட்டைகள் கட்டி முடிந்ததும், பல சமயங்களில் முடிவதற்கு முன்னும், விழுந்து பாழாய்ப்போனதில் ஆச்சரிய மொன்றுமில்லை.

கதைகளைச் சிறுவர்கள் மனமுவந்து கேட்கின்றனர். பொருத்தமானவைகளாயிருந்தால் எத்தனை தடவை வேண்டுமானாலும் சலியாது கேட்கின்றனர். கேட்டதைப் பிறருக்குச் சொல்ல முயலுகின்றனர். நடித்துக் காட்டல் என்றால் அவர்களுக்கு ஒரே ஆனந்தந்தான். மாணவர்கள் வயதிற்கேற்ற கதைகளை அதற்கேற்ற முறையுடன் கையாளும் ஆசிரியர் கற்றல் விதிகளையெல்லாம் சுலபமாக அனுஷ்டிக்கிறார். அதன் மூலம் அவர் கொடுக்கும் பயிற்சியும் நிலைபெறுகிறது.

கதைகளின் மூலம் எவ்விஷயங்களையும் சொல்லித்தரலாம். இங்கு தாய்மொழிப் பயிற்சி கொடுப்பதற்கு இவ்வற்புதக் கருவியை

எப்படி உபயோகிப்பதெனப் பார்ப்போம். ஆசிரியர்கள் குழந்தைகளின் பருவத்திற்கேற்ற கதைகளைப் பொறுக்கித் தம் நோக்கத்திற்கேற்ப அவைகளைப் பாகுபடுத்தி அமைத்துக் கொள்ளவேண்டும். பிறகு அவைகளைச் சரியான முறைப்படி வழங்கவேண்டும். தாய் மொழியில் பயிற்சி கொடுக்க விரும்பிக் கதையினைக் கையாளுபவர்கள் கீழ்க்கண்ட நோக்கங்களை மனதில் சதா வைத்துக்கொள்ளவேண்டும்.

(1) குழந்தைகளை மகிழச் செய்யவேண்டும். மகிழ்ச்சியில் தான் வளர்ச்சி பூரணமாக ஏற்படுகிறது.

(2) ஒத்துணர்வு, கற்பனாசக்தி, சிந்தனை முதலிய மனப்பண்புகளை வளர்க்கவேண்டும்.

(3) மெள்ள மெள்ள வந்து கம்பரையும், வள்ளுவரையும், இளங்கோவையும் அனுபவிக்கப் பழக்கவேண்டும்.

மேற்கூறிய லக்ஷியங்களை அடைவதற்கு ஏதுவான கதைகளைப் பொறுக்க வேண்டும். சிறுவர்களுக்கேற்ற கதைகளைத் தொகுத்து வெளியிடுவதற்குச் சமீபகாலத்தில் தான் ஆரம்பித்திருக்கின்றனர். இத்துறையில் இன்னும் நாம் அதிகம் முன்னேற வேண்டியிருக்கிறது. கதைகள் ஆரம்பத்தில் வயதிற்கும் சுற்றுப்புறத்திற்கும் இயந்தனவாக ஆசிரியர்களே அமைத்துக் கொள்ளவேண்டும்.

தமிழ் எழுத்துக்கள் கற்கும் முன்னாலேயே கதையைக் கற்றுக் கொடுத்து அதை மனப்பாடமாகச் சொல்லத் தெரிந்த பிறகு, வாக்கியங்களைக் கரும்பலகையில் எழுதி வாசிக்கப் பழக்கவேண்டும். பிறகு வாக்கியங்களில் உள்ள வார்த்தைகளைக் கற்ற பிறகு அதிலுள்ள அசைகளையும் பிறகு எழுத்துக்களையும் கற்பிக்க வேண்டும். இப்படிச் செய்தலின் மூலம் வெகு ஆவலுடன் விளையாட்டாகவே தமிழ் எழுத்துக்களை எல்லாம் சிறுவர்கள் கற்றுக் கொள்ளுகின்றனர். இம்முறையில் ஆரம்பப் பாடம் கற்பதைக் 'கதைமுறை' என்கின்றனர். இதை அமெரிக்கர்கள் தம் குழந்தைகளுக்குத் தமது தாய்மொழிப் பயிற்றலில் கையாளுகின்றனர்.

எழுத்துக்களைக் கற்க உதவிய கதைகளே வார்த்தைகளையும் அவற்றின் சரியான உபயோகங்களையும் கற்க உதவுகின்றன. கதையின் மூலம் மாணவர்கள் கருத்துக்களைக் கோர்வையாகச் சொல்லவும் எழுதவும் கற்றுக்கொள்ளுகின்றனர். இப்படிச் சொல்லப் பழகியவைகளில் வரும் புதிய பதங்கள் பொருத்தமான அர்த்தத்துடன் மனதில் அகலாது பதிந்துவிடும். மாணவர்களின் வார்த்தைப் பொக்கிஷத்தை நிரப்புவதற்குக் கதைகள் பெருந்துணையா யிருக்கும்.

குழந்தைகளுக்குக் கதை சொல்லும்பொழுது குழந்தைகள் பாஷையிலேயே சொல்ல வேண்டுமென நினைத்துச் சிலர் கொச்சைத்

தமிழில் கதை சொல்லுகின்றனர். இது தவறு. மொழி இலக்கண வழுவில்லாததாக இருந்தால்மட்டும் போதாது. இலக்கியச் சுவை ததும்ப வேண்டும். வாக்கியங்கள் சிறிதாயும் வார்த்தைகள் குழந்தை மனதிற்கு எளிதில் விளங்கக்கூடியனவாயும் இருக்க வேண்டும். சிறுவர்களுக்குச் சொல்லும் கதைகளில், செய்கை நிறைந்து வழிய வேண்டும். அச் செய்கைகளை விவரிக்கும் நடை திரையில் தீட்டப்பட்ட ஓவியம் போல் சந்தர்ப்பங்களைச் சொற்களால் சித்தரிக்கக் கூடியதாயிருக்க வேண்டும். நடந்த சம்பவங்களைச் சரித்திரம் போல் சொல்லுவது கதையாகாது. கதையின் கடைசி முடிவு வரையிலும் மாணவர்கள் அதற்குமேல் 'என்ன நடந்தது' என்று தெரிந்து கொள்ள ஆவலுள்ளவர்களா யிருக்கும்படி கதையினை அமைக்கவேண்டும். கதை சிறுவர் இயல்பிற் கேற்றதா யிருப்பினும் உயரிய தன்மை வாய்ந்திருக்கவேண்டும். அநேகர் எதை யும் கதையின் மூலம் சொல்லவேண்டு மென்பதற்காக ரசமற்ற போக்கை யுடைய கதைகளை ஜீவனற்ற பாஷையில் சொல்லுகிறார்கள். இதில் மாணவர்களுக்கு எங்ஙனம் பிரியம் ஏற்படும்.

தமிழில் தொன்று தொட்டுக் குழந்தைகளுக்குப் பிரியம் ஊட்டிய பல கதைகள் இருக்கின்றன. அவைகளைத் திரட்டித் தொகுக்கவேண்டும். அநேக சந்தர்ப்பங்களில் சூழ்நிலைக்குத் தகுந்த சிறு கதைகளை நாமே உண்டாக்கலாம். நூற்றலின் மூலம் பாடம் படித்துக்கொண்டிருந்த 7 வயதுக் குழந்தைகளுக்கு நான் கீழ்க்கண்ட கதையைச் சொன்னேன்.

## அந்த வெறுப்பான சத்தம்

மத்தியானம் மௌனமாக நூற்கிறநேரம் எல்லோரும் மௌனமாக நூற்றுக்கொண்டிருந்தனர். பொம்மக்காள் மௌனமாக நூற்றுக்கொண்டிருந்தாள், அமைதியாக இருந்தது. நடுவில்கட கட கட கட என்ற சப்தம் கேட்டது பொம்மக்காள் மனசுக்கு வருத்தம் அதிகமாயிருந்தது. இந்தச் சப்தம் எங்கிருந்து வருகிறது என்று கண்டுபிடிக்க பொம்மக்காள் எழுந்தாள். பலகையடியில் பார்த்தாள்; அங்கு ஒன்றும் காணோம். மேஜையடியில் பார்த்தாள். அங்கு ஒன்றும் காணோம். நாற்காலி யடியில் பார்த்தாள். அங்கு ஒன்றும் காணோம். கொஞ்ச நேரம் சத்த மில்லாதிருந்தது. பொம்மக்காள் பலகைமேல் உட்கார்ந்து நூற்க ஆரம்பித்தாள். சிறிது நேரத்தில் கட கட கட கட என்ற சத்தம் கேட்டது. அமைதி குலைந்தது. காதிற்கு வெறுப்பான சத்தம். நூற்க முடியவில்லை. பொம்மக்காள் எழுந் தாள். மறுபடியும் குனிந்து பலகை அடியில் பார்த்தாள். அங்கு ஒன்றும் காணோம். மேஜையடியில் பார்த்தாள். அங்கு ஒன்றும் காணோம். நாற்காலி யடியில் பார்த்தாள். அங்கு ஒன்றும் இல்லை. கொஞ்சம் சத்தமில்லாதிருந்தது. பொம்மக்காள் பலகை மீது உட்கார்ந்து நூற்க ஆரம்பித்தாள்.

சிறிது நேரத்தில் கட கட என்ற சத்தம் கேட்டது. அமைதி குலைந்தது. காதிற்கு வெறுப்பாயிருந்தது. பொம்மக்காளுக்கு கவலை அதிகம் உண்டானது. மறுபடியும் எழுந்தாள் பலகையடியில் குனிந்து குனிந்து நன்றாகப் பார்த்தாள். மேஜை அடியில் பார்த்தாள். நாற்காலி அடியில் பார்த்தாள் ஒன்றும் காணோம். சுற்றிச் சுற்றிப் பார்த்தாள், எங்கும் ஒன்றும் காணோம். அமைதியாக இருக்

தது. தூங்க ஆரம்பித்தாள். சிறிது நேரத்தில் அந்த கடகட கடகட என்ற வெறுப்பான சத்தம் கேட்டது. பொம்மக்காள் சத்தம் எந்தப்பக்கமிருந்து வருகிறதென்று கூர்ந்து கவனித்தாள். மிகவும் பக்கத்திலிருந்து வருவது கேட்டது, தக்ளியைக் கூர்ந்து கவனித்தாள். அட்டை சரியான இடத்தில் இல்லை. அதை எடுத்துச் சரியான இடத்தில் வைத்துக்கொண்டு அதன் மேல் தக்ளியைச் சுழலவிட்டாள். சத்தம் நின்றுவிட்டது. எங்கும் ஒரே அமைதி. அன்றையிலிருந்து பொம்மக்காள் அட்டையைச் சரியான இடத்தில் வைத்து நூற்றாள். பிறகு எப்பொழுதும் அந்த வெறுப்பான சத்தம் கேட்டதேயில்லை.

இக்கதையைச் சொல்லும்பொழுது 30 பேர் உட்கார்ந்திருந்த வகுப்பில் நிசப்தம் குடிகொண்டது. எல்லோரும் என்னைப்பார்த்த வண்ணமேயிருந்தனர். இக்கதையை நான் ஒருதரம் சொல்லி முடித்த உடனே பலர் தாங்களே சொல்ல முன்வந்தனர். சரியாகவும் சொன்னார்கள். மறுமுறை இதைக் கேட்கமாட்டார்கள் என்று நினைத்தேன். நான் அந்த வகுப்புக்குச் சென்றபோதெல்லாம் இக்கதையைச் சொல்லும்படி வற்புறுத்தினர். இக்கதைக்கு இத்தகைய அங்கீகாரம் ஏன்? இதிலிருக்கும் வார்த்தைகள் பெரும்பாலும் அவர்களுக்குத் தெரிந்தது. அத்துடன் சொல்லப்படுவன எல்லாவற்றையும் தங்களின் அகக்கண் முன் மானதச் சித்திரங்களாக அமைத்துக்கொள்ள முடிகிறது. இதில் எதுவும் அவர்களின் அனுபவத்திற்குப் புறம்பானவையல்ல. சிலர் இம்மாதிரி சப்தத்தைக் கேட்டிருக்கின்றனர். ஆனால் சரியான காரணம் தான் தெரியாது. எதனால் உண்டாயிருக்கலாம் என்று பெரிய ஆவல், கடைசியில் தெரிந்ததும் பெரிய ஆனந்தம். ஏனெனில் இவ்வளவு சிறிய அஜாக்கிரதை எவ்வளவு பரபரப்பை உண்டு பண்ணிவிட்டது என்பதுதான்.

சரியான கதைகளைத் தேர்ந்தெடுப்பதைக்காட்டிலும் சொல்லும் முறை அதிக முக்கியமானது. சிறந்த முறைகளைக் கையாளாவிடில் பொருத்தமான கதைகள் கூட குழந்தைகளின் மனதைக் கவராமல் விட்டு விடலாம். எங்கள் அனுபவத்தில் நாங்கள் சிறந்தவை எனக் கண்ட சிலமுறைகளைக் கீழே குறிப்பிடுகின்றேன்.

பொதுவாகச் சிறுவர்களுக்கு நீதிக்கதைகள் சொல்வதால் அதிகம் பயனில்லை. அப்படியே சொன்னாலும் அந்த நீதிகளை வெளிப்படையாக விளக்குவதால் அதிக உபயோகமில்லை. மணம் மலருடன் கலந்திருக்கிற மாதிரிகதையுடன் செய்தி புகுந்திருக்கும்படி விட்டுவிடவேண்டும். மாணவர்கள் விரும்பாத ஒரு உண்மையை அவர்கள் மனதில் புகுத்துவதற்காகவே ஒரு கதைசொல்லப்பட்டது என அவர்களுக்கு வெளிப்படையாகத் தெரிந்தால் வெறுக்க ஆரம்பித்து விடுவார்கள். கதையை ருசிக்கட்டும், அதன் சாரம்தானே அவர்கள் உடலில் ரத்தத்தின் மூலம் பரவும். இருதயமும் மனமும் பண்படும்.

கதை சொல்லுகிறதற்கு முன்னால் ஆசிரியர் சொல்லப் போகும் கதையைத் தானே அனுபவித்திருக்க வேண்டும். அதைப் பலமுறை தனியே சொல்லிப் பார்த்திருத்தல், புதிதாக ஆசிரியர்களாயிருப்பவர் களுக்கு உதவியாக இருக்கும். கதையைத் தட்டுத் தடங்கலின்றிச் சொல்ல வேண்டும். ஆனால் ஆரம்ப முதல் கடைசி வரையில் ஒரே தொனியில் சொல்லக்கூடாது. நடுநடுவே சந்தர்ப்பத்திற்கிசையக் குரலை மாற்றிக் கொள்ளவேண்டும். இத்துடன் பொருத்தமான நடிப்பும் அவசியம். விருப்பு வெறுப்புப் போன்ற மனவெழுச்சிகளைத் தகுந்த மெய்ப்பாடு களின் மூலம் வெளிப்படுத்த வேண்டும். அவைகளை வார்த்தைகளால் சொல்வதைவிட முகக்குறிகளால் காட்டுவது மேலானது. இம்மாதிரி சிரமம் எடுத்துக் கொண்டு சொல்ல ஆரம்பித்தால் காலில்லாக் கதை களுக்குக்கூடக் கால் முளைத்துவிடும். சிறுவர்கள் அத்தகைய கதைகளைச் சீக்கிரம் மறக்கமாட்டார்கள். அவர்கள் கனவிலும் நனவிலும் இக்கதை கள் மனதின் முன் நின்று தமது வேலைகளைச் செய்யும்.

கதை சொல்லுவதில் நேரம் மிகவும் முக்கியமானது. அனாவசிய மாகக் காலதாமதம் பண்ணக்கூடாது. குழந்தைகள் சலித்துப் போவார் கள். இதற்காகக் கதையின் முடிவை உடனே சொல்லிவிடவேண்டு மென்பதன்று. கதையின் முழு அழகையும் எடுத்துக் காட்ட விரும்பும் ஆசிரியர் காலத்தை நீட்டக்கூடாது. குறுகிய காலத்தில் கதையின் எல்லா அம்சங்களுக்கும் தக்க இடம் கொடுத்துச் சொல்லி முடிக்க வேண்டும்.

கதை சொல்லும்பொழுது நடுநடுவே வரும் உபகதைகளை அள வுக்குமேல் நீட்டிவிடக்கூடாது. கதையில் வரும் வர்ணனைகளையும் சுருக்கமாகச் சொல்லிமுடிக்கவேண்டும். சிறுவர்களுக்கு நுணுக்கங் களைக் கவனிப்பதிலும் கேட்பதிலும் பிரியமேயானாலும் கதை கேட்கும் பொழுது அக்கதை வேகமாகப் போகவேண்டுமென்றுதான் அவர்கள் விரும்புகின்றனர்.

ஒரு கதையை ஒருதரம் மட்டும் சொன்னால் போதாது. தொட்டும், பார்த்தும், முகர்ந்தும், கேட்டும், ருசித்தும் அறிகிறதால் ஏற்படும் அறிவு, தெளிந்ததாக இருக்கும். ஐயம் திரிபுகளுக்கு இட மிராது. ஆராய்வூக்கத்தால் தூண்டப்படும் இளங்குழந்தைகள் எதையும் தமது ஐம்பொறிகளாலும் அறிய முயற்சிக்கின்றனர். கதைகளையும் எத்தனை பொறிகளால் அறியமுடியுமோ அத்தனை பொறிகளாலும் அறி வதற்கு ஆசிரியர்கள் குழந்தைகளுக்கு உதவி புரியவேண்டும். உதாரண மாக, ஒரு கதையைக் கேட்கச்செய்யலாம். அதே கதை நடிக்கப்படுவ தைப் பார்க்கச் செய்யலாம். அந்தக் கதையில் வரும் பாத்திரங்களுக்கு வேண்டிய ஆடைகள், நடிப்பதற்கு அவசியமான திரைகள், சாமான்கள் முதலியவற்றைத் தயார் செய்வதின் மூலம் கைக்கு வேலைகொடுத்து

அதை அறியச்செய்யலாம். இம்மாதிரி பல தடவைகள் பல வழிகளில் ஒரே கதையை அறிவதன்மூலம் தெளிவான மானதக் காட்சிகளைக் குழந்தைகள் தமது மனதில் பதிவு செய்துகொள்ளுகின்றனர்.

கதைகளைச் சொல்லும் முன்னும் பின்னும் பொருத்தமான உபகரணங்களை உபயோகப்படுத்தவேண்டும். படங்களை நிறைய உபயோகபபடுத்தலாம். கதையின் சுருக்கம் கரும்பலகையில் எழுதி வைக்கலாம்.

கதை சொல்லி முடிந்தபிறகு குழந்தைகள் சரியாகத் தெரிந்து கொண்டிருக்கின்றார்களாவென்று கண்டுபிடித்து அதற்குமேல் வேண்டுவன செய்யவேண்டும். கதையைச் திரும்பச் சொல்லச் செய்யலாம். நடிக்கச்செய்யலாம் எழுதச் செய்யலாம். இவ்விதப் பரீக்ஷையின் மூலம் குழந்தைகள் கதையைச் சரியாகத் தெரிந்துகொள்ளவில்லை என்று கண்டால், மறுமுறையும் அதைத் தெளிவு படுத்தவேண்டும்.

இம்முறைகளையும் இன்னும் இவைபோன்ற சீரிய முறைகளையும் கையாண்டு ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்கு அவர்கள் வாழ்வுக்சேற்ற பிராணிகள், தம்மையொத்த குழந்தைகள், தொழில்கள், விளையாட்டுகள் புல் பூண்டுகள் முதலியவற்றைப் பற்றிய கதைகளையும், பாலர்களுக்குச் செய்கைகள் நிறைந்த கதைகளையும், பன்னிரண்டு வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு வீரம், துணிவு முதலியன நிறைந்திருக்கும் வீரர்களின் சரித்திரக் கதைகளையும், தேசபக்தியையும், மாணவ சமுதாயத்தில் அன்பும், பெருமையும் உண்டாகும்படியான கதைகளையும் இன்னும் பெரியவர்களுக்கு, இளங்கோவின் சிலம்புச் செல்வமும், கம்பரின் ராம காதையும் போன்ற நீண்ட புராண இதிகாசக் காவியக் கதைகளையும், அவற்றின் பாற் பற்றும் ஏற்படுமாறு சொன்னல் தமிழறிவு பெருகும். பெற்ற அறிவு பேரறிவாகி அழியா ஆனந்தத்தினையும் தரும்.

(வித்யாலயம். இதழ் 3)

# செய்தித்திரட்டு

## ஆரம்ப ஆசிரியர் சங்கம், கணியம்பாடி (வட ஆற்காடு).

27-6-42-ல் இச்சங்கத்தின் மாதாந்திரக் கூட்டம் ஜில்லா கல்வி அதிகாரி ஸ்ரீ V. K. ராமன் மேனன் அவர்கள் தலைமையில் கூடிற்று. தலைவர் 'தேசீய பாதுகாப்பு' என்பதைப் பற்றிப் பேசினர். வேலூர் ஸ்பெஷல் டெவலப்மெண்டு ஆபீஸர் ஸ்ரீ T. R. ரெங்கஜை அய்யங்கார் 'ஆசிரியர்களும் கிராமமும்' என்பது பற்றி சொற்பொழிவு செய்தார். வூரிஸ் காலேஜ் ஆங்கிலப் பேராசிரியர் ஸ்ரீ S. ஜார்ஜ ஐஸக் மத்திய கிழக்கு யுத்தத்தைப்பற்றிப் பேசினர். ஜூனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ R. சுப்ரமணிய அய்யர் பாடசாலையின் உணவுப்பொருள் சம்பந்தமான தோட்டங்களை ஏற்படுத்துவதைப் பற்றி விளக்கினர். சென்னை கல்வி இலாகா டைரக்டர் மிஸ்டர் ஸ்டேதம் அவர்களுக்கு 'ஸர்' என்ற வீர பட்டம் அளிக்கப்பட்டதற்கு இச்சங்கம் பெருமகிழ்ச்சி அடைகிறது.

## பழனி தாலூகா கல்வி மகாநாடு, ஒடப்பட்டி.

21-6-42-ல் இம்மகாநாடு, இடையக்கோட்டை ஜமீன்தார் ஸ்ரீ சுப்ரமணிய லட்சுமிபதி அவர்களின் அக்ராசனத்தின்கீழ் மிக விமரிசையாக நடைபெற்றது. சுமார் 3000 ஜனங்கள் விஜயம் செய்திருந்தார்கள். பழனி முனிசிபல் கவுன்சிலர் ஸ்ரீ லட்சுமிபதி ராஜு அவர்கள் தேசீயக் கொடியை ஏற்றுவித்தார். பழனி முனிசிபல் உப அக்ராசனர் ஸ்ரீ ராமச்சந்திரன் மகாநாட்டைத் திறந்து வைத்தார். வாலிபர் கடமை, மாதர் முன்னேற்றம், முதியோர் கல்வி, கிராம சீர்திருத்தம், தேசபக்தி என்ற விஷயங்கள் பற்றி பல பிரமுகர்கள் பேசினர்கள். இக்கிராமத்தில் எல்லாரும் கல்வி கற்கவேண்டுமென தீர்மானிக்கப்பட்டது. கிராம மகா ஜனங்களின் பொருளுதவியாலும் வரவேற்பாளர்களின் பெரு முயற்சியாலும் இம்மகா நாடு இனிது நிறைவேறியது.

## கோடைக்கானல் தாலூகா போர்டு ஆரம்ப ஆசிரியர் சங்கம்.

13-6-42-ல் இச்சங்கம் ஊரல்பட்டியில் உதவி ஆசிரியர் ஸ்ரீ A. சேதுபதி அவர்கள் தலைமையில் கூடிற்று. தீர்மானம்:—

"வாழ்க்கைக்கு வேண்டிய உணவு, உடை பொருள்களின் விலை அதிகமாக இருப்பதால் யுத்தப்படி கொடுத்து உதவும்படி ஜில்லா போர்டார் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறது."

## ஆரம்ப ஆசிரியர் சங்கம், திருப்புவனம்.

13-6-42-ல் இச்சங்கம் ஜில்லா கல்வி அதிகாரி ஸ்ரீ M. D. பால் அவர்கள் தலைமையில் கூடிற்று. திருப்பாச்சேத்தி சங்க அங்கத்தினர்கள்

வந்திருந்தனர். தலைவர் அவர்கள், பாடசாலை அபிவிருத்திக்கான சர்க்கார் பாடதிட்டம், பாஷை, பொது அறிவு, போதனா சாதனம், தோட்டம், விளையாட்டு செஞ்சிலுவை இயக்கம் முதலிய விஷயங்களைப் பற்றி சொற்பொழிவு செய்தார்.

---

## போர்டு ஆரம்ப ஆசிரியர் யூனியன், ராசிபுரம்.

5-7-42-ல் இந்த யூனியனின் பொதுக்கூட்டம் நடைபெற்றது. யூனியன் தலைவர் ஸ்ரீ கிருஷ்ணராவ், ஆசிரியர்கள் யூனியனில் கலந்து கொள்வதினால் ஏற்படும் நன்மைகளைப் பற்றிப் பேசினார். காரியதரிசி ஸ்ரீ ஜேம்ஸ் என். செல்வதாஸ், ஆடோமாடிக் அபராதம், சம்பளவெட்டு இவ்விரண்டு உத்திரவுகளையும் ரத்து செய்ததற்காக யூனியன் சார்பாக ஜில்லா போர்டு பிரசிடெண்டு அவர்களுக்கும், ஜில்லா கல்வி அதிகாரி அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்தார். சாமான்களின் விலை உயர்வை உத்தேசித்து ஆசிரியர்களுக்கு இரண்டு மாத சம்பளத்தை அட்வான்ஸாக கொடுத்து ஆறுதவணையில் பிடித்துக்கொள்ளும்படியும், கிரேடுக்குறிய சம்பளத்தைக் கொடுக்கவும், யுத்த அலவன்ஸ் கொடுக்கும் படியும் ஜில்லா போர்டைக் கேட்டுக்கொள்ள தீர்மானித்தது.

---

## டவுன் ஆரம்ப ஆசிரியர் சங்கம், தஞ்சை.

11-6-42-ல் இச்சங்கம் சீனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ P. K. ராமநாதன் அவர்கள் தலைமையில் கூடிற்று. அப்பொழுது ஜூனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி அய்யர் அவர்கள் 'தற்கால யுத்த நிலைமையும் ஆசிரியர் கடமையும்' என்பது பற்றி சொற்பொழிவு செய்தார்: தலைவர் 'தாய்மொழி கற்பித்தல்' என்பது பற்றி விரிவாகப் பேசினார்.

---

## அம்மன்கோவில் எய்டேட் ஆரம்ப பாடசாலை, கும்பகோணம்.

21-6-42-ல் இப்பாடசாலையின் பெற்றோர் சங்கவிழா நடைபெற்றது. சீனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ A ஸ்ரீனிவாச அய்யங்கார் அவர்கள் தலைமை வகித்தார். 80 தாய்மார்களடங்கிய சுமார் 250 பெற்றோர்கள் விஜயம் செய்திருந்தனர். மாணவ மாணவிகள் ஆடல் பாடல்களினால் வந்திருந்தவர்களை மகிழ்வித்தனர். சரஸ்வதி பாடசாலை தலைமை உபாத்தியாயினி ஸ்ரீமதி ரஞ்சிதம் டேவிஸ் 'பெற்றோர் கடமை' என்பது பற்றி சொற்பொழிவு செய்தார். ஜூனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ K. M. நாராயணசுவாமி அய்யர் அவர்கள் 'கட்டாயக் கல்வி' என்பது பற்றித் தெளிவாகப் பேசினார். பெற்றோர்கள் சார்பில் தமிழ் வித்துவான் திரு. சாமி சிதம்பரனார் அவர்கள் அரியதோர் உபன்னியாசம் செய்தார். அவரைப் பின்பற்றிப் பலர் தங்கள் கருத்துக்களை

வெளியிட்டனர். பாடசாலை புது மானேஜர் ஸ்ரீ V. K. அருணாசல உடையார் பாடசாலை முன்னேற்றத்திற்கான பல உதவிகளைச் செய்து தரும்படி பெற்றோர்களை வேண்டிக்கொண்டார். தலைவர் முடிவுரையில் பல தாய்மார்கள் விஜயம் செய்திருந்ததைப் போற்றி ஆசிரியர்களும் பெற்றோர்களும் இம்மாதிரி கலந்து உழைக்குமாறு கேட்டுக் கொண்டார்.

---

## ஸ்ரீராமா ஆரம்பப் பாடசாலை, திருக்குடந்தை. (கும்பகோணம்.) பெற்றோர் தின விழா.

17-6-42-ல் இப்பாடசாலை பெற்றோர் தின விழாவும், புதிய கட்டிடத்தின் திறப்பு விழாவும், சென்னை அட்மினிஸ்ட்ரேடர் ஜனரல் ராவ்பகதூர் ஸ்ரீ V. ரெங்கஸ்வாமி அய்யங்கார் அவர்கள் தலைமையில் கடவுள் வாழ்த்துடன் வெகு சிறப்பாக நடைபெற்றன. திரளான பெற்றோர்களும் பிரமுகர்களும் விஜயம் செய்திருந்தனர். கும்பகோணம் ரேஞ்சு கல்வி அதிகாரி ஸ்ரீ A. ஸ்ரீனிவாஸய்யங்கார் அவர்கள் பள்ளிக்கூட மானேஜர் ஸ்ரீ ராமாமிர்தாசாரியாரை அறிமுகப்படுத்திப் பள்ளிக்கூடம் செவ்வனே நடந்து வருவதைப் பற்றியும் பெற்றோர்களுக்குத் தெரிவித்தார். ஜூனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ K. M. நாராயணசுவாமி அய்யா அவர்கள் பெற்றோர்களின் ஒத்துழைப்பைப் பற்றி பேசினர். சென்னை லேடி வில்லிங்டன் கல்லூரி தமிழ் பண்டிதை ஸ்ரீமதி V. கிருஷ்ணவேணியம்மாள் ஆரம்பக்கல்வியின் அவசியத்தைப் பற்றியும் அதிலுள்ள கஷ்டங்களைப் பற்றியும் பெற்றோர்களுக்கு எடுத்துக் கூறி, பெற்றோர்கள் ஆசிரியர்களுடன் கலந்து ஒத்துழைக்குமாறு சொன்னார்கள். தலைவர் முடிவுரையில் பெற்றோர்கள் ஒத்துழைப்பைக் காட்டுவதற்கு இப்பள்ளிக்கூடமே வழிகாட்டி என்றும், இப்பள்ளிக்கூடத்திற்குத் தனியாக ஒரு கட்டிடத்தை பெற்றோர்கள் முன் வந்து கட்டிக்கொடுக்கவேண்டுமென்றும் கூறினர். சிறுவர் சிறுமியர் செய்த ஆடல் பாடல் சம்பாஷணைகளைப் பற்றியும் அவைகளை போதித்த ஆசிரியர்களைப் பற்றியும் எல்லாரும் மெச்சினர்.

---

## உதவி பெறும் ஆரம்ப பாடசாலை, ஸ்ரீவாஞ்சியம் பெற்றோர் சங்கம்.

29-6-42-ல் இச்சங்கத்தின் ஆதரவில் ஸ்ரீ P. S. ரத்தின சிகாமணி பிள்ளை அவர்களின் தலைமையில் ஸ்ரீ G. P. வேலன் செட்டி அவர்கள் மாணவர்கள் எளிதில் கற்றுக் கொள்ளுமாறு சுமார் 30 யோக ஆஸனங்களைச் செய்து காட்டினர். முடிவில் முதல் மார்க்கு வாங்கி பாஸ் செய்தவர்களுக்கும், வருஷ முழுவதும் சுத்தமாயும் நேர்த்தியாயும் ஆஜரான மாணவர்களுக்கும், பள்ளிக்கூட நாட்களில் ஆஜர் அதிகமுள்ள மாணவர்களுக்கும், பரிசுகள் அளிக்கப்பட்டன.

# பத்திராதிபர் குறிப்பு

## பெற்றோர் சங்கங்கள்

கோடை விடுமுறை முடிவடைந்து பள்ளிக்கூடங்கள் திறந்துவிட்டன. ஆனால், போதுமான புஸ்தகங்களின் பிரதிகள் கிடைக்கவில்லையென்ற புகார் எங்கும் இருக்கின்றது. காகிதம் கிடைக்காததினால், புத்தகங்கள் அச்சிடக்கூடவில்லை. அச்சிட்டுள்ள புஸ்தகங்களும் சீக்கிரத்தில் கிடைப்பதில்லை. ரயில் மார்க்கத்தில் பார்சல் அனுப்பும் வசதிகள், யுத்த காரணத்தினால் குறைந்திருக்கிறபடியால், புத்தகப் பார்சல்கள் சரியாகச் சேருவதில்லை. எனவே, பள்ளிக்கூடங்களில் சரிவர வேலை நடைபெற பல இடையூறுகள் இக் காரணங்களினால் ஏற்பட்டுள்ளன. ஆயினும் ஆசிரியர்கள், இச்சமயத்தில் தகுந்த சிந்தனை செய்து மாணவர்களுக்கு திறனுடைய கல்வி போதிக்கக் கடமைப் பட்டவர்கள் என்றே சொல்லவேண்டும். புஸ்தகங்கள் இல்லாமல் பாட திட்டங்கள் தயாரிப்பதும், அதிக காகிதச் செலவு இல்லாமல், பிள்ளைகளுக்குப் பயிற்சி அளிப்பதும், கற்றதை மறக்கமுடியாமல் இருப்பதற்கு வேண்டிய உபகரணங்கள் தயாரிப்பதிலும் ஊக்கமும் கவனமும் ஆசிரியர்கள் செலுத்துவது அவசியமாகும்.

இம் மாதிரியான நோக்கத்துடன் ஆரம்பப் பாடசாலைகளில் வேலைசெய்து வரவேண்டுமானால், பெற்றோர்களின் உதவி மிகவும் அவசியம். அநேகமாக ஒவ்வொரு பள்ளிக்கூடத்தின் சார்பிலும் பெற்றோர் சங்கம் ஒன்று ஏற்பட்டிருப்பது பாராட்டத்தக்கதே. அப்படி இல்லாத பள்ளிக்கூடங்களில், சீக்கிரத்திலேயே ஒரு பெற்றோர் சங்கம் ஏற்படுத்த முயலவேண்டும். இச் சங்கம், கல்வி அதிகாரிகள் பள்ளிக்கூடத்தைப் பார்க்க வரும் காலத்து மாத்திரம் கூடி, பத்திரிகைகளுக்கு கூட்டச் செய்தி அனுப்பும் நோக்கத்துடன் வேலை செய்து வந்தால் பள்ளிக்கூடத்திற்கும் அதில் படிக்கும் பாலர்களுக்கும் பிரயோஜனமாகாது. இவை அடிக்கடி கூடவேண்டும். ஆசிரியர்கள் இக் கூட்டத்தில் பள்ளிக்கூட பாடதிட்ட முறைகளை விவரித்துச் சொல்லவேண்டும். பிள்ளைகள் செய்துவரும் வேலைப்பாட்டை அவர்கள் பார்க்கும்படி செய்ய வேண்டும். அவர்கள் என்ன உதவி செய்யக்கூடுமோ அதை எடுத்துக் காட்டி அவர்களிடமிருந்து அதை அடைய முயலவேண்டும். கிராமத்திலுள்ள பெற்றோர்களிடையே, கிராமப் பள்ளிக்கூடத்தின்பால் மிக்க அன்பு உண்டாக்கவேண்டும். ஸ்தல ஸ்தாபன பள்ளிக்கூடமாயிருந்த போதிலும், உதவி பெறும் பள்ளிக்கூடமாயிருந்தாலும், கிராமவாசிகளுக்கு அப் பள்ளிக்கூடத்தின்பால் மிக்க நட்பு உண்டாகுமானால், பாடசாலைக்கு எல்லாவித நன்மைகளும் உண்டாகும். காலம் எவ்வளவு கடினமாயிருந்தபோதிலும் மாணவர்களின் கல்வித்திறன் சற்றும் குறையாமல் ஓங்கியிருக்கும் என்பதில் ஐயமில்லை.

## நமது புதிய பிரசுரங்கள்

**பூவர்ணனை** BY N. சுப்ரஹ்மண்ய அய்யர், M.A., L.T., & K. ராமமூர்த்தி, M.A., L.T., (Dip. Geo.)

புதிய பாட திட்டத்தை ஒட்டியது.

நான்காம் வகுப்புக்குரியது .... விலை அணா 7.

ஐந்தாம் வகுப்புக்குரியது .... விலை அணா 8.

I, II, III பாரங்களுக்குரியது விலை அணா 10; அணா 12; அணா 12.

**அங்க கணிதம்** BY S. ராதாகிருஷ்ண அய்யர், B.A., & K. வைத்தியநாதஸ்வாமி அய்யர், B.A.,

அவர்களால் எழுதப்பட்டதை

புதிய பாட திட்டத்தை முழுதும் தழுவி

S. ராஜமைய்யர், B.A., L.T., அவர்களால் திருத்தி அமைக்கப்பட்டது.

Book I for Form I 0—10—0; Book II for Form II 0—12—0
Book III for Form III 0—12—0

**P. வரதாச்சாரி அண்டு கம்பெனி**

நெ. 8, லிங்கி செட்டித் தெரு, சென்னை

REGD. No 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
ரிஜிஸ்டர் நெ. 1506

## அசோகா சுகந்த பாக்கு தூள்

தயாரிப்பவர் :

எம். கே. கிருஷ்ண செட்டி,

அசோகா பாக்டரி,

கோயமுத்தூர்.

Regd. No. M. 3473


# S. I. T. U. PROTECTION FUND, LTD., MADRAS

BAZAAR ROAD, VILLUPURAM.

## செலுத்த வேண்டிய தொகை

30 வயதுக்குள்ளிருப்பவர்கள் :

சேரும்போது

| | | |
|---|---|---|
| பிரவேசக் கட்டணம் | .... | ரூ. 1. |
| வருஷக் கட்டணம் | .... | ரூ. 2. |

மாதச் சந்தா .... ரூ. 1 முதல் 4 வரையில்
பிரதி வருஷமும் சேரும் மாதத்தில் .... ரூ. 2
பிரதி மாதமும் .... ரூ. 1 முதல் 4 வரையில்

30 வயதுக்கு மேலிருப்பவர்கள் :

அதிக வயது ஒவ்வொன்றுக்கும் ரூ. 1 அதிகமாக, சேரும்போது மாத்திரம் பிரவேசக் கட்டணம் செலுத்த வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| தற்கால கையிருப்பு | ... | ... | ரூ. 2,25,000 |
| பாலிஸிக்கள் | ... | ... | 1,350 |
| யூனிட்டுகள் | ... | ... | 2,500 |

## அனுபவிக்கும் லாபம்

1. மரணம் ஏற்பட்டால், நியமித்த வார்சுகளுக்குத் திட்டப்படி பணம் கொடுக்கப்படும்.

மாதா மாதம் ரூ. 1 செலுத்தினால், கிடைக்கக்கூடிய பணம் ரூ. 250 முதல் ரூ. 375 வரை.

2. 3 வருஷங்களுக்குப் பிறகு, நிதியிலிருந்து கடன் பெற்றுக்கொள்ளலாம்.

3. 3 வருஷங்களுக்குப் பிறகு, நிதியிலிருந்து விலகும்படி ஏற்பட்டால், திட்டப்படி பணம் கொடுக்கப்படும்.



Printed by K. Sadagopachariar at the Liberty Press, 10, Linghi Chetty St., Edited & Published by Mr. M. S. Sabhesan, M.A., "for The South India Teachers' Union." 520, High Road, Triplicane, Madras.